பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 07 | சனிக்கிழமை | 23.12.2023 | அதிர்வு 144

## இலங்கையில் மீண்டும் கொரோனாத் தொற்று



ஜே.என் – 1 ஒமிக்ரோன் வகை புதிய கொரோனா வைரஸ் திரிபு இலங்கையிலும்

05

# இலங்கைக்குக் கடத்தி வரப்பட்ட சுமார் ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் தமிழகத்தில் சிக்கியது!

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் உள்ளிட்ட இருவர் கைது





(ந.லோகதயாளன்)

மியன்மாரில் இருந்து இலங்கைக்குக் கடத்தி வரப்பட்ட ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் நேற்று மாலை தமிழகத்தில் சிக்கியுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட இரண்டு கடத்தல்காரர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

56 கிலோகிராம் எடையுள்ள குறித்த போதைப்பொருள், மியன்மாரில் இருந்து கடல் வழியாக இந்தியாவின் மணிப்பூருக்குக் கடத்தி வரப்பட்டு அங்கிருந்து தமிழ்நாடு – சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு சென்னையின் ஊடா

02

# ரணிலின் ஏமாற்று வித்தை அம்பலம் புலிகளின் தீர்க்கதரிசனம் நிரூபணம்

## கஜேந்திரகுமார் வெளிப்படைக் கருத்து

(கனகராசா சரவணன்)

“தமிழீழ விடுதலைப்புலிகள் 2005 ஆம் ஆண்டு, ரணில் விக்கிரமசிங்கவை நம்ப வேண்டாம் என்று தமிழ் மக்களிடம் தெரிவித்திருந்தனர். அப்போது இந்த உண்மையை விடுதலைப் புலிகள் சொன்னபோது தமிழர் ஆய்வாளர்கள் குழம்பினர். ஆனால், அன்று தீர்க்கதரிசனமாக விடுதலைப்புலிகள் தெரிவித்ததை இன்று ரணில் தன்னுடைய செயற்பாடுகளால் நிரூபித்துள்ளார். எனவே, தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றுகின்ற செயற்பாடுகளில் ஏனைய கட்சிகளும் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஈடுபடக்கூடாது என்று பகிரங்கமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.”

05




# புதிய அரசே தற்போதைய தேவை!

## சஜித் அணி சுட்டிக்காட்டு

“புதிய அரசே எமது நாட்டுக்குத் தேவைப்படுகின்றது. அதற்கான வாய்ப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும்

02







தமிழ்த் தேசிய கட்சிகள், அணிகள் தனியன்களாகப் பிரிந்து நிற்கின்றமை கண்கூடு.

ஒரே ஒரு விடயத்துக்காக அவை அவ்வப்போது ஒரு மேசைக்கு வருவதுண்டு. தமிழ் மக்களின் பிரச்சினை ஒன்றையொட்டி பொதுக் கடிதம் ஏதேனும் எழுதி, எல்லோரும் சேர்ந்து ஒப்பமிடுவது குறித்துப் பேசவே அப்படி கூடுவதுண்டு.

அவ்வாறு கூடி, மூன்று கடிதங்கள் குறித்து முடிவெடுக்கப்பட்டும்,

06

# இலங்கை – இந்திய ஒப்பந்தம் பற்றியே சம்பந்தன் கருத்துரைத்திருக்கின்றார்!

## 13 பற்றி அல்ல எனச் சுட்டுகின்றார் சீ.வி.கே.சிவஞானம்

(ச.சந்துரு)

**வியாழனன்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடனான சந்திப்பின் போது சம்பந்தன் ஐயா அரசமைப்பின் 13 ஆம் திருத்தச் சட்டம் பற்றிப் பேசவில்லை. மாறாக, இலங்கை - இந்திய ஒப்பந்தம் பற்றியே பேசியிருக்கின்றார். அதனை நான் முக்கியமாகப் பார்க்கிறேன்.**

**- இவ்வாறு கூறியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வி.கே. சிவஞானம்.**



தமிழ் எம்.பிக்களுக்கும் ஜனாபதிக்கும் இடையிலான சந்திப்புத் தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். அச்சந்திப்புத் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் எம்.பிக்களுக்கும் ஜனாபதிக்குமிடையிலான சந்திப்பில் சம்பந்தன் ஐயா பங்கு பற்றி இருக்கிறார். அதில் அவர் இரண்டு விடயங்களைச் செய்திருக்கிறார்.

ஒன்று – சம்பந்தன் ஐயா தன் இயங்குநிலையை இதன் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்.

மற்றையது – அவர்13 ஆம் திருத்தச் சட்டம் பற்றி பேச வில்லை. மாறாக, இலங்கை – இந்திய ஒப்பந்தம் பற்றிப் பேசியிருக்கிறார். அதனை நான் முக்கியமாகப் பார்க்கிறேன்.

நான் 13 பற்றி பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வருகிறேன். இலங்கை – இந்திய ஒப்பந்தம் என்று வரும் போது அது இலங்கை மற்றும் இந்தியாவின் விடயங்களையும் உள்ளடக்கியது. அதைப் பேசுவதுதான் சரியானதாக இருக்கும்.

மேலும் விக்னேஸ்வரன் இக்கூட்டத்தில் பங்குபற்ற வில்லை. அது தொடர்பாக அவர் அனுப்பிய கடிதத்தில் ஜனாதிபதி தன் கோரிக்கைகளை நிறைவேற்றாதமை பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

அரசமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் எல் மற்றும் ரி பிரிவுகளின் கீழ் மாகாண நிர்வாகத்துக்கான ஆலோசனைச் சபையை நியமிப்பது பற்றி விக்னேஸ்வரன் தம் கருத்து களைக் குறிப்பிடுகின்றார்.

அவை அரசமைப்பின் படி சட்ட ரீதியாகச் சாத்தியமற்ற விடயங்கள் என்றும், அவை செயற்படுத்த முடியாதவை என்றும் ஜனாதிபதிக்கு சட்ட ஆலோசனை கிடைத்திருக்கக் கூடும் என நான் ஊகிக்கிறேன்.

ஜனாதிபதி காலத்தை இழுத்தடிப்புச் செய்துவிட்டு இப்போது யதார்த்தத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார். இந்த ஆட்சி யில் அரசியல் தீர்வு இல்லை, புதிய நாடாளுமன்றத்தி லேயே அது சாத்தியம் என்று குறிப்பிட்டிருக்கிறார். – என்றும் சிவஞானம் தெரிவித்தார்.

### இலங்கைக்குக் கடத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிராமத்தின் ஊடாக இலங்கைக்குக் கடத்தும் ஏற்பாட டின்போதே கைப்பற்றப்பட்டுள்ளது.

மெத்தம்பெட்டமைன் ரகத்தைச் சேர்ந்த இந்தப் போதைப்பொருளின் இலங்கை ரூபா பெறுமதி ஆயி ரம் கோடி எனவும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்க் கடத்தல்காரருடன் இந்தியாவின் ஒரு பிரபல கடத்தல் காரரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

இந்தியாவின் மத்திய அரசின் கீழ் உள்ள சுங்கத் திணைக்களத்தின் கீழேயுள்ள டி.ஆர்.ஐயினரே இந்தப் போதைப்பொருளைக் கைப்பற்றியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### புதிய அரசே தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறுகையில்,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிதான் இந்த நாட்டை வங்குரோத்து அடைய வைத்தது. அந்தத் தரப்புடன்தான் ஐக் கிய தேசியக் கட்சியின் தலைவர் தற்போது நிறைவேற்று அதி கார ஜனாதிபதியாக இருக்கின்றார்.

இவ்வாறு நாட்டை வங்குரோத்து அடைய வைத்தவர்களால் நாட்டை மீடக முடியுமா? முடியாது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பயணிப்பதற்குச் சாத்தியமே இல்லை.

எனவே, புதியதொரு அரசே எமது நாட்டுக்குத் தேவைப்ப டுகின்றது. அதற்கான வாய்ப்பை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்." – என்றார்.





# பாதாள உலகக் குழு தலைவர் மாக்கந்துர மதூஸின் மனைவியின் வீட்டைச் சுற்றிவளைத்துச் சோதனை!

## பெறுமதியான பொருள்கள் மீட்பு









பிரபல பாதாள உலக குழுவின் தலைவர் மாக்கந்துர மதூஸின் மனைவி என கூறப்படும் பெண் ஒருவர் நுவரெலியாவில் மாகாஸ்தொட்ட பகுதியில் தங்கியிருந்த வாடகை வீட்டை முற்றுகையிட்ட நுவரெலியா குற்றத்தடுப்புப் பொலிஸார் அங்கு சோதனையிட்டுள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கை நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாகாஸ்தொட்ட விஜதபுற எனும் இடத்தில் மேற்கொள்ளப்பட்டதாக நுவரெலியா குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை நுவரெலியா குற்ற புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி ஆர்.எஸ்.ராஜசிங்கவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது அந்த வீட்டிலிருந்து நவீன ரக கார் ஒன்றும், 37 லட்சம் ரூபா பணமும், பெறுமதி அளவிட முடியாத 91 மாணிக்க கற்கள், மேலும் தங்க நகைகள் ஆகியவற்றுடன் 05 கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சோதனை நடவடிக்கையில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மாற்றுத்திறனாளிகளுக்கும் சாரதி அனுமதிப்பத்திரங்கள்

## இம்மாதம் முதல் வழங்க அரசு அங்கீகாரம்




மாற்றுத்திறனாளிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்களை இம்மாதம் முதல் வழங்க அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக மாற்றுத்திறனாளிகளுக்கான நாடாளுமன்ற மன்றம் தெரிவித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்காக ஜனாதிபதி அல்லது பிரதமர் தலைமையில் சுயாதீன ஆணைக்குழுவை நிறுவுமாறு மாற்றுத்திறனாளிகளுக்கான ஐக்கிய முன்னணி, மாற்றுத்திறனாளிகளுக்கான நாடாளுமன்ற மன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும், ஜனாதிபதியுடன் விசேட கலந்துரையாடலொன்றை நடத்த மாற்றுத்திறனாளிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுமென மாற்றுத்திறனாளிகளுக்கான நாடாளுமன்ற மன்றத்தின் தலைவர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

# லண்டனுக்கு பிஸ்டலை எடுத்துச் செல்ல முயன்ற பிரித்தானியப் பயணி கட்டுநாயக்காவில் கைது!

(ரஸீன் ரஸ்மின்)

இலங்கையில் இருந்து கைத்துப்பாக்கி உள்ளிட்ட ஆயுத பொருள்களை சட்டவிரோதமாக எடுத்துச் செல்வதற்கு முயற்சித்த பிரித்தானிய பிரஜை ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரித்தானிய பிரஜையான 54 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து கைத்துப்பாக்கி மற்றும் 10 துப்பாக்கி தோட்டாக்கள், "ரம்போ" வகையைச் சேர்ந்த கத்தி உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறான துப்பாக்கிகள் மற்றும் கத்திகளை வான்வழியாக எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை எடுத்துச் செல்வதாக இருந்தால், இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் சட்டரீதியான அனுமதியைப் பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த வெளிநாட்டு பிரஜை எவ்விதமான அனுமதியையும் பெறாமல் கைத்துப்பாக்கி உள்ளிட்ட பொருள்களை எடுத்துச் செல்ல முயன்றுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



நேற்றுப் பிற்பகல் 12.55 மணிக்கு இங்கிலாந்தின் ஹீத்ரோ விமான நிலையத்திற்குப் புறப்படவிருந்த ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானமானத்தில் பயணிப்பதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு இவர் வருகை தந்துள்ளார்.

இதன்போது, அவர் கொண்டு வந்த பயணப் பொதிகளை கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஸ்கேன் செய்த போது, இந்த கைத்துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களும், தோட்டாக்களும் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அந்தப் பயணப் பொதியை எடுத்து வந்த பிரித்தானிய பிரஜை விமான நிலைய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

அந்தப் பயணியிடம் பொலிஸார் விசாரணை செய்தனர். அந்தக் கைத்துப்பாக்கியை தனது பாட்டி தனக்கு ஒரு கலைப் பொருளாகப் பரிசளித்தார் என அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் உள்ளிட்ட பொருள்களை மேலதிக விசாரணைக்காக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவினருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஓட்டோ - சைக்கிள் விபத்தில் காயமடைந்த நபர் உயிரிழப்பு

### புத்தளத்தில் சம்பவம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – ரத்மல்யாய பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்து, புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புத்தளம், அல்காசிமி சிட்டியை சேர்ந்த சுல்தான் அப்துல் காதர் ராசிக் எனும் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர், புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் ரத்மல்யாய, அல்காசிமி சிட்டி சந்தியில் ஓட்டோவும் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் காயமடைந்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர்.

புத்தளம் தள வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, பின் சாதாரண வார்ட்டுக்கு மாற்றப்பட்ட இந்த நபர் நேற்று முன்தினம் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரழந்த நபரின் ஜனாஸா தொடர்பான மரண விசாரணை நேற்று இடம்பெற்றது. புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் மரண விசாரணையை நடத்தினார்.

தலையில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கி ஜனாஸாவை குடும்பத்தினரிடம் ஒப்படைத்துள்ளதாக புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித்தார்.

விபத்துடன் தொடர்புடைய சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் புத்தளம் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வன்னியில் முதல் தடவையாக ஐம்பது அடி கிறிஸ்மஸ் மரம்

உடையார்கட்டு புனித யூதா ததேயு ஆலயத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்து பிறப்பை கொண்டாடவும் ஆலய கட்டுமான பணிக்கு நிதி சேர்க்கும் வகையில் வன்னி மண்ணில் முதல் தடவையாக 50 அடி உயரம் கொண்ட பிரமாண்ட கிறிஸ்மஸ் மரம் இன்று சனிக்கிழமை மாலை 7.00 மணிக்கு கரோல் நிகழ்வோடு, யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.ஜோ. ஜெபரட்ணம் அடிகளாரினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

உணவகம், விற்பனை நிலையங்கள் மற்றும் மேல் தளத்தில் அமைத்துள்ள பாலன் குடில் ஆகிய சிறப்பமாங்களுடன் கூடிய நிகழ்வாக இது இடம்பெறவுள்ளது. இன்று முதல் மாலை 5.00 மணி முதல் இரவு 10 மணிவரை மக்கள் பார்வைக்காக அது திறந்திருக்கும்.



## இலங்கையில் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடையாளம் காணப்பட்டுள்ளது என்று ஸ்ரீஜயவர்தன புர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் ஆய்வுகூடத் தலைவர் சந்திம ஜீவந்திர தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் அவர் இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

கொரோனா சோதனைகள் தற்போது குறைந்தளவிலேயே முன்னெடுக்கப்படுவதால், அதன் உண்மையான தரவுகளைப் பெற முடியாதுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், கொரோனா வைரஸுக்கு எதிரான நோய் எதிர்ப்புத் தடுப்பூசிகள் இன்னும் வழங்கப்படுகின்றன என்றும், அதிக பாதிப்பை எதிர்கொள்ளும் தரப்பினர் பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெறுவது முக்கியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடரும்சீரற்றகாலநிலைகாரணமாக டெங்குக் காய்ச்சலும் பரவும் நிலை யில், தொடர்ச்சியான காய்ச்சல் காணப்படுமானால், அது தொடர்பில், பொதுமக்கள் உரிய மருத்துவரை அணுகி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## ரணிலின் ஏமாற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நேற்று (நேற்றுமுன்தினம்) தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர்த்து ஏனைய தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்து நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் பேசியுள்ளார். புதிய நாடாளுமன்றத்தில்தான் அரசியல் தீர்வு கிடைக்கும் என்று ரணில் புதுப் பொய் கூறியுள்ளார்.

தீர்வுக்கான – நல்லிணக்கத்துக்கான இந்தப் பேச்சு கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ரணிலால் ஆரம்பிக்கப்பட்டபோதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மக்களுக்குத் தெளிவாக ஒன்றை எடுத்துச் சொன்னது. அதாவது இது ரணிலின் நாடகம் என்று கூறியிருந்தோம். ரணில் ஒருபோதும் இனப் பிரச்சினையை நேர்மையாகத் தீர்க்க மாட்டார் என்றும் நாங்கள் சவால் விட்டிருந்தோம்.

கடந்த ஒன்றரை வருடங்களாக ரணில் சொன்ன பொய்களை நம்பி ஏமாறி இருக்கின்ற ஆட்கள், இந்தப் புதுப் பொய்யையும் நம்பி ஏமாறப் போகின்றார்களா என்ற கேள்வி ஒருபுறம் இருக்க, இப்படிப்பட்ட ஒரு தெளிவான நிலைப்பாட்டை ரணில் அறிவித்ததன் பிறகாவது தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றுகின்ற செயற்பாடுகளில் ஏனைய கட்சிகளும் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஈடுபடக்கூடாது என்று பகிரங்கமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தயவு செய்து இனியாவது எடுக்கின்ற தமிழ் வாக்குகளுக்கு நேர்மையாக நடந்து கொள்ளுங்கள் என்று தமிழ் எம்.பிக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழினத்தைத் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க இந்த ராஜபக்ஷ தரப்பையும் தொடர்ந்து காப்பாற்றி வருகின்றார்.

அன்று ரணில் விக்கிரமசிங்கவை நம்ப வேண்டாம் என்று தமிழ் மக்களிடம் விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர். அப்போது இந்த உண்மையை விடுதலைப்புலிகள் சொன்னபோது தமிழர் ஆய்வாளர்கள் குழம்பினர். ஆனால், அன்று தீர்க்கதரிசனமாக விடுதலைப் புலிகள் தெரிவித்ததை இன்று ரணில் தனது செயற்பாடுகளால் நிரூபித்துள்ளார்." – என்றார்.


**இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்**
**இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்**
**இணைந்து**



**"தாயகஒலி" பிரதம ஆசிரியர்**

*தம்பு சிவா அவர்களின் (தம்பு. சிவசுப்பிரமணியம்)*

**(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு**

நடத்தும்

**சிறுகதைப் போட்டி**

இருபிரிவுகளாக நடத்தப்படும்

(பரிசுத் தொகை 1 இலட்சம்)

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

*அனுப்ப வேண்டிய முகவரி :*
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அக்கடித விவகாரங்கள் முன்நகராமல் தடைப்பட்டு நிற்கின்றன.

ஒன்று – இந்தியப் பிரதமர் மோடிக்கு எல்லோரும் சேர்ந்து ஒரு கடிதத்தை எழுதுவோம் என்று நீதியரசர் விக்னேஸ்வரனின் யோசனையில் தயாரிக்கப்பட்ட வரைவு. அது ஒப்பங்களுக்காகக் காத்திருக்கின்றது மாதக்கணக்கில். அது பற்றிய விடயங்கள் நம் மக்களுக்கு நன்கு தெரியும்.

அடுத்தது – முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா அச்சுறுத்தலால் பதவியை விட்டு ஓடிய விவகாரத்தை ஒட்டி, தூதரகங்கள், ராஜதந்திரத் தரப்புகளுக்கு எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் ஒப்பமிட்டு அனுப்ப வேண்டிய கடிதம். அதுவும் அரைகுறையில் நிற்கின்றது.

மூன்றாவது – மத்திய அரசின் பணியாளரான யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரை அதற்கு மேலதிகமாக வடக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளராகவும் நியமித்தமையை ஆட்சேபித்து, அதை உடனடியாக மாற்றும்படி கோரி ஜனாதிபதிக்கும் பிற தரப்புகளுக்கும் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் சேர்ந்து ஒரு கடிதம் அனுப்புவது என்று தீர்மானிக்கப்பட்ட விடயம்.

இந்த விவகாரமும் கிடப்பில் போடப்பட்டிருந்ததாயினும், அது இப்போது திடீரென மீண்டும் சூடு பிடித்து, எல்லாக் கட்சித் தலைவர்களிடமும் விரைந்து ஒப்பம் பெறும் முயற்சி அவசர அவசரமாக நடைபெற்று வருவதாகத் தெரிகின்றது.

மாகாணசுகாதாரசேவைப்பணிப்பாளர் பதவி மாகாண சபையின் கீழ் வருகின்றது. ஆறு ஆண்டுகள் அந்தப் பதவியில் இருந்த வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் அது தனக்கு போதும் என்று கருதிய நிலையில், யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளராகத் தம்மைச் சுருக்கிக் கொண்ட போது அப்பதவிக்கு தெற்கிலிருந்து ஒரு பெரும்பான்மை இனத்தவரை கோட்டா அரசு அனுப்பியது. அது இங்கு பலத்த எதிர்ப்பலைகளை கிளப்பத் தவறவில்லை. வந்தவரும் சுகாதார சேவைக்கு அப்பால் தேவையற்ற பொது விவகாரங்களில் தலையை நீட்டிக் குழப்பங்களை ஏற்படுத்த, எதிர்ப்பு வலுப்பட்டது. அதனால் அவரை மாற்றினர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தியின் வசம் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி மேலதிகமாக ஒப்படைக்கப்பட்டது. போதனா வைத்தியசாலையின் நிரந்தரப் பணிப்பாளர் நிலையில் இருப்பவர் மருத்துவர் சத்தியமூர்த்தி. அந்த வகையில் மத்திய சுகாதார அமைச்சின் அதிகாரி அவர். அவரிடம் மாகாண சுகாதார சேவை நிர்வாகத்தை ஒப்படைப்பது மாகாண சபையின் அதிகாரங்களை மத்திய அரசிடம் ஒப்படைக்கும் வேலை என்று தெரிவித்து, அனேகமாக எல்லாத் தமிழ் கட்சிகளும் அதனை ஒன்றுபட்டு எதிர்த்தன. அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட கொள்கை அடிப்படையில் அந்த நியமனம் தவறு என்று சுட்டிக் காட்டினார். அரசுத் தலைமைக்கு கடிதங்களுக்கு மேல் கடிதங்கள் எழுதினார்.

எல்லோரும் சேர்ந்து அந்தப் பதவிக்கு பொருத்தமான ஒருவரை தேடிப்பிடித்து பரிந்துரைத்தனர். அவர் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.விநோதன். மருத்துவ நிர்வாகத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். அவரை அப்பதவிக்கு நியமிக்க அரசும், முன்பிருந்த சுகாதார அமைச்சரும், இப்போது இருக்கும் சுகாதார அமைச்சரும் கூடத் தயார். அமைச்சர் டக்ளஸும் அதற்கு எதிர்ப்பு இல்லை. ஆனால், இடையில் நந்தி போல வந்து குந்தினார் வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ் அம்மா.

ஆளுநரின் மகள் யாழ் போதனா வைத்தியசாலையில் மருத்துவ மாணவருக்கான பயிற்சியில் ஈடுபட்டிருக்கின்ற சூழ்நிலையில், யாழ் போதன வைத்தியசாலைப்பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தியை விட்டுக் கொடுக்க ஆளுநருக்கு விருப்பம் இல்லை என்று கூறப்படுகின்றது. மருத்துவர் விநோதனிடம் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பதவி வழங்கப்பட விடாமல் ஆளுநர் முட்டுக்கட்டை போட, இந்த விவகாரம் இப்போது குரங்கு அப்பம் பிரித்த கதையாகும் சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது எனத் தெரிகின்றது.

ஒரு புறம் – மத்திய அரசின் பணியாளரான மருத்துவர் சத்தியமூர்த்தி. மத்திய அரசின் சுகாதாரப் பணியில் தான் அவருக்கு வேலை, மாகாண அரசில் இல்லை என்று எதிர்ப்பு.

மறுபுறம் – மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பதவியை மருத்துவ கலாநிதி விநோதனுக்கு வழங்கக் கூடாது என்று ஆளுநரின் அடம்பிடிப்பு.

இவற்றிற்கு மத்தியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பழையவரையே அப்பதவிக்கு கொண்டு வருவதற்கு ஆளுநர் மட்டத்தில் காய் நகர்த்தல்கள் ஆரம்பமாகிவிட்டன என்று செய்திகள் கசிந்துள்ளன.

இந்த செய்தி கிடைத்ததும் தமிழ் கட்சிகள் எல்லாம் உஷாராகிவிட்டன. தாம் ஆரம்பத்தில் இது விடயத்தில் தயாரித்து, வரைவு நிலையில் வைத்திருந்த கடிதத்தில் எல்லாத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடமும் ஒப்பம் பெற்று, அரசுத் தலைமைக்கும் ஆளுநருக்கும் அனுப்பி வைப்பதற்கான மும்முர ஏற்பாட்டில் அவை களத்தில் குதித்திருக்கின்றன. இப்போது கடித வரைவு ஒவ்வொரு கட்சித் தலைவரையும் தேடி, விரைந்து, சுற்றி வருவதாகத் தெரிகின்றது.

இதற்காகவாவது நம் தலைவர்கள் ஒன்றுபடுவது நல்ல விடயம்தானே...!

இதற்குள் சுகாதார சேவையில் இரண்டாவது மேலதிக பதவியையும் வைத்திருக்கும் மருத்துவர் சத்தியமூர்த்திக்கு, அவரது மூலப் பதவியில் குடைச்சல் கொடுக்கும் வேலையை ஸ்ரீதர் தியேட்டர் ஆரம்பித்து விட்டதாகத் தெரிகின்றது.

இதுவரை செயலிழந்திருந்த யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவுக்கு ஏதோ ஒரு வகையில் ஏற்பாடு செய்து, உயிர் கொடுத்திருக்கின்றது ஸ்ரீதர் தியேட்டர்.

பதின்மூன்று பேர் கொண்ட அந்த அபிவிருத்திக் குழுவின் தலைவர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையும் உறுப்பினரான வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரத்தையும் தவிர, ஏனையோரெல்லாம் தியேட்டருக்கு வேண்டப்பட்டவர்கள் அல்லது மிக நெருங்கியவர்கள்.

இரா. செல்வவடிவேல் (அபிவிருத்திக் குழுச்செயலாளர்), சி.தவராஜா, கோ.ருஷாங்கன், சட்டத்தரணி ரங்கன், யோகேஸ்வரி பற்குணராஜா, சட்டத்தரணி செலஸ்ரின், செல்வி சுசீலா சாரங்கபாணி, அமைச்சர் டக்ளஸின் இணைப்பாளர்களான கௌரி மற்றும் சாந்தநாயகி ஆகியோருடன் உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) சுதர்சனும் முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் மாணிக்கராஜாவும் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

குழுவின் முதல் கூட்டத்திலேயே வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்திக்குக் குடைச்சல் ஆரம்பித்து விட்டது என்று தகவல்.

தேசிய மட்டத்தில் மட்டுமல்ல, மாவட்ட – மாகாண மட்டங்களிலும் கூட நமது சுகாதாரத் துறைக்கு இது போதாத காலம் தான் போலும்...!






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மருத்துவ எச்சரிக்கை

மீண்டும் கொவிட் தொற்றுப் பற்றிய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

பக்கத்து நாடான இந்தியாவில் தன் கைவரிசையை அது திரும்பவும் காட்டத் தொடங்கியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருக்கமான ஊடாட்டம் காரணமாக அது இலங்கைக்குள்ளும் கால் பதித்திருக்கக் கூடும் என வைத்திய வட்டாரங்கள் சந்தேகம் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே நாட்டின் சுகாதார சேவை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில் இந்தப் பாதிப்பும் ஏற்படும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

அதனால் இந்த விடயத்தை இலகுவாக எடுத்துக் கொள்ளக் கூடாது எனக் குறிப்பிட்டு, புதிய கொவிட்-19 திரிவு வகையினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை மதிப்பிடுமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அதிகாரிகளை வலியுறுத்தியிருக்கின்றது.

புதிய கோவிட்-19 வகையின் அபாயத்தை மதிப்பிடுவதற்காக சுகாதார அமைச்சகத்தின் தொற்று நோய்கள் தொடர்பான ஆலோசனைக் குழுவை உடனடியாகக் கூட்ட சுகாதார அமைச்சகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கச் செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே வலியுறுத்தியுள்ளார்.

கொவிட்டின் மாறுபாடான அல்லது திரிவடைந்த புதிய வைரஸ் வடிவமே இப்போது தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் பரவி வருகின்றது.

“இந்த மாறுபாட்டு வைரஸின் விளைவுகளைப் பற்றி பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நாட்டின் தற்போதைய சூழல் முந்தைய கொவிட் -19 பரவலின் போது இருந்ததை விட முற்றிலும் மாறுபட்டதாக இருப்பதால், சுகாதார அதிகாரிகள் விரைவில் சாத்தியமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் நிலைமை சிக்கலானதாக இருக்கும்” என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கச் செயலாளர் எச்சரிக்கின்றமை அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

“எங்களுக்கு மருத்துவ ரீதியில் அச்சுறுத்தல் உள்ளது. மோசமான சூழ்நிலைக்கு நாங்கள் தயாராக வேண்டும். நாம் அறிந்தபடி, உலக சுகாதார அமைப்பு சமீபத்தில் இதை (இந்த வைரஸை) ‘திரிவடைவதில் ஈடுபாடு’ கொண்டது (‘variant of interest’) என்று பெயரிட்டது. அது போகின்ற போக்கில் ‘கவலையின் திரிவாக’ (‘variant of concern’) உருவாகினால் கண்டிப்பாக நம் நாட்டிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, சுகாதார அமைச்சகத்தின் தொற்று நோய்கள் தொடர்பான ஆலோசனைக் குழுவை உடனடியாகக் கூட்டி அச்சுறுத்தல் மதிப்பீடு செய்யுமாறு அமைச்சகத்தை வலியுறுத்துகிறோம். அப்போது, நோயின் தாக்கம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தலாம்” என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

மருந்துப் பொருள்கள் மற்றும் மனித வளங்களின் பாரிய பற்றாக்குறைக்கு மத்தியில் முழு சுகாதாரத் துறையும் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கி வருவதால் அரசாங்கம் இந்த நிலைமை தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் டாக்டர் அலுத்கே மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்பாராத வகையில் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் ஏதாவது நடந்தால் நாடு அதிக நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்றார் அவர்.

“மருந்துகள் மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறையுடன், மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதார நிபுணர்களின் பாரிய வெளியேற்றத்தின் விளைவாக நாங்கள் தற்போது ஒரு பெரிய நெருக்கடியை எதிர்கொள்கிறோம். அந்தச் சூழ்நிலையின் பின்புலத்தில் நாம் மற்றொரு தொற்று நோயை எதிர்கொள்ள நேர்ந்தால் அது மிகவும் ஆபத்தானது. எனவே, ஆபத்தைத் தவிர்க்கவும், துறையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த எச்சரிக்கையை அரசு கவனத்தில் உடன் எடுக்க வேண்டும். இது விடயத்தில் மெத்தனமாக இருந்தால் சில சமயங்களில் அந்தத் தவறுக்கு நாம் பெரிய விலை கொடுக்க நேர்ந்து விடும்.

நாடும் மக்களும் வரமுன் காக்கும் திட்டங்களில் கவனம் செலுத்துவது இன்றைய அவசர, அவசியத் தேவையாகும்.

# அரச மாடிக்குடியிருப்புக்களுக்கான உரிமங்களை வழங்க நடவடிக்கை

## ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவிப்பு






அரச மாடிக்குடியிருப்புக்களின் வீடுகளின் உரிமத்தை மக்களுக்கு வழங்கும் கொள்கை ரீதியான தீர்மானத்தைத் துரிதப்படுத்த வேண்டும் எனத் தேசியப் பாதுகாப்புத் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அது தொடர்பிலான பிரச்சினைகளை நிவர்த்திக்கும் நோக்கில் விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உரிய நிறுவனங்களின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

காணி உரிமம் வாயிலாக மக்களுக்கு அரச மாடிக் குடியிருப்புக்களின் வீட்டு உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே சாகல ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய 2024 ஆம் ஆண்டுக்குள் 8 ஆயிரத்து 351 வீடுகளுக்கான உரிமைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதோடு, அது தொடர்பிலான பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

காணி உரிமை தொடர்பில் எழுந்திருக்கும் பிரச்சினைகள், அதற்கான விடுவிப்பு பத்திரங்கள், சான்றிதழ்கள் தொடர்பிலான பிரச்சினைகள், பிணையாளர் மற்றும் பரிந்துரைகள் ஆகிய பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு பதவி நிலை பிரதானி அலுவலகத்தின் பணிப்பாளர் ஜெனரல் சிரான் ஹேரத், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் ஜெனரல் என்.பீ.கே.ரணவீர, கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் ஜே.எம்.பத்ரானி ஜயவர்தன, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் தலைவர் சரண கருணாரத்ன, காணி பணிப்பாளர் நாயகம் பந்துல ஜயசிங்க, திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரியந்தா திசாநாயக்க உள்ளிட்டவர்களும் உரிய நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

## மூளைக் காய்ச்சல் நெருக்கடியால்

# மாத்தறை சிறையிலிருந்து கைதிகள் இடம் மாற்றம்

மாத்தறை சிறைச்சாலையில் 3 கைதிகள் மூளைக் காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து, அந்த சிறையில் உள்ள கைதிகளை அங்குணுகொலபெலஸ்ஸ மற்றும் பூஸா சிறைச்சாலைகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மூளை காய்ச்சலுக்கு உள்ளான 3 கைதிகளும் மாத்தறை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கைதிகளை பார்வையிட வருபவர்களுக்கு எதிர்வரும் பத்து நாள்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.



# காவலூர் வி.நவரத்தினத்தின் நினைவேந்தல் நேற்று யாழில்

நாட்டுப்பற்றாளர் காவலூர் வி.நவரத்தினம் அவர்களது நினைவேந்தல் நேற்று வெள்ளிக்கிழமை யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது நவரத்தினத்தின் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ் நினைவேந்தல் நிகழ்வில் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.













# தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது!

## - மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவிப்பு




தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட் டங்கள் கடும் பாதிப்பை சந்தித்துள்ளன.

தாமிரபரணி ஆற்றில் தொடர்ந்து வெள்ளம் கரை புரண்டு ஓடுவதாலும் குளங்கள் நிரம்பி உடைந்ததால் வெளியேறிய தண்ணீராலும் தூத்துக்குடி மாவட்டத்தின் பல கிராமங்கள் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

குளங்களில் இருந்து வெளியேறிய தண்ணீர் வயல்வெளிகள் மற்றும் தாழ்வான இடங்களில் தேங்கி நிற்பதால் அதனை அகற்றுவதில் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ள போதிலும், இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த நிலையில், இந்தியாவில் இதற்கு முன்னர் தேசிய பேரிடர் என்ற ஒன்று இதுவரை அறிவிக்கப்படவில்லை என்பதால், தமிழ் நாட்டு வெள்ள அனர்த்தத்தையும் தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தென்மாவட்ட மழை, வெள்ளப் பாதிப்பு மற்றும் நிவாரண பணிகள் குறித்து மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் டில்லியில் தமிழக செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், தூத்துக்குடி போன்ற பகுதிகளில் 50 சென்றி மீற்றர் மழை என்பது அண்ணளவாக ஒரு வருடத்துக்கு பெய்ய வேண்டிய மழை அளவு. அது ஒரேநாளில் பெய்ய மழைநீர் தேங்கி மக்கள் தவிக்கும் நிலை உருவானது என்று குறிப்பிட்டுள்ளார்.

மழைநீர் வடிகால் பணிகளை முறையாக மேற்கொண்டிருந்தால் இவ்வளவு பிரச்சனை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சென்னையில் 4 ஆயிரம் கோடியில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகள் குறித்து முரணான கருத்தை தமிழ் நாட்டு அமைச்சர்கள் கூறியதாகவும் நிர்மலா சீதாராமன் விமர்சித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் இருந்து பாடம் கற்றிருந்தால் இந்த நிலை வந்திருக்காது எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தாமதமாக எச்சரிக்கை வழங்கியது என்ற குற்ச்சாட்டை ஏற்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

மத்திய அரசு வழங்கிய நிதியை தமிழ் நாட்டு அரசு உரிய முறையில் செலவு செய்யவில்லை எனவும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட போது மு.க.ஸ்ராலின் டில்லியில் கூட்டணி பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார் எனவும் நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தமிழ் நாட்டில் மீண்டும் கொரோனா பரவல்!



இந்தியாவில் தலைதூக்கி வரும் கொரோனாத் தோற்றால் தமிழகத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 104 ஆக உயர்ந்துள்ளது என இந்தியாவின் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் சிங்கப்பூரில் ஒரே நாளில் 3 ஆயிரம் பேருக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டது.

இந்த நிலையில், கடந்த 14 ஆம் திகதி கேரள மாநிலத்தில் ஒரே நாளில் 280 பேருக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டது, அவர்களின் குருதி மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டபோது அது “ஜே.என்.– 1” என்ற உறுமாறிய புதுவகை கொரோனா வைரஸ் என தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து வேகமாக பரவி வந்த இந்த திரிப்படைந்த வைரஸ் தொற்று தமிழ் நாட்டிலும் பரவலடைய ஆரம்பித்துள்ளது.

அதன்படி, சென்னை மாவட்டத்தில் 14 பேருக்கும், திருவாரூர் மாவட்டத்தில் 3 பேருக்கும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 2 பேருக்கும், கோவை, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவருக்கும் என 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதில் 8 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில், மேலும் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 104 ஆக அதிகரித்துள்ளது.

ஆனால் இதுவரை கொரோனா பாதிப்பால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2019 ஆம் ஆண்டு சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் அடுத்த சில மாதங்களில் உலகம் முழுவதும் பரவி மக்களை பெரும் இன்னலுக்குள்ளாக்கியிருந்தது.

இதன்போது பொது முடக்கம், பயணக் கட்டுப்பாடுகள் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டு, பொருளாதார ரீதியாகவும் கடுமையான பாதிப்பை கொரோனா ஏற்படுத்தியது.

இதனைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்து தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டதன் பிறகு தொற்றின் தாக்கம் சற்று ஓயத் தொடங்கியது, இடையில் அவ்வப்போது உருமாறிய கொரோனா பரவினாலும் அதன் தாக்கம் அவ்வளவாக வெளிப்படாமல் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், சுமார் 2 ஆண்டுகளுக்குப் பின்னர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளமை மக்களிடையே அச்சத்தை அதிகரித்துள்ளது.

# காசாவில் போர் முடிவடையும் வரை பணயக்கைதிகளை விடுவதில்லை!

## - ஹமாஸ் அறிவிப்பு

காசாவில் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இஸ்ரேல் ஒப்புக்கொள்ளும் வரை பணயக்கைதிகளை விடுவிக்கப் போவதில்லை என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கிடையிலான போர் நிறுத்தம் குறித்து கெய்ரோவில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இஸ்ரேல் பல தடவைகள் போர் நிறுத்தத்தை நிராகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மோதலின் ஆரம்பத்தில் இருந்து, 240 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலிய பணயக்கைதிகள் சிறைப்பிடிக்கப்பட்டு, அவர்களில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் கடந்த நவம்பர் மாதம் விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன், எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் மோதல் முடிவுக்கு கொண்டுவரப்படாவிட்டால் காசாவில் உணவுப்பொருட்களுக்கு பஞ்சம் ஏற்படக் கூடிய வாய்ப்பு காணப்படுவதாக உலக உணவுத்திட்டம் அறிவித்துள்ளது.



# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானிற்கு பிணை!

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானிற்கு அந்த நாட்டு உயர் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

நாட்டின் இரகசியங்கள் கசியவிட்டமை தொடர்பாக அவருக்கு கடந்த ஒகஸ்ட் மாதம் மூன்று வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இது தவிர, பிரதமராக கடமையாற்றிய காலப்பகுதியில் வெளிநாட்டவரால் வழங்கப்பட்ட பரிசுகளை சட்டவிரோதமாக அவர் விற்றதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் அவர் நிராகரித்திருந்தார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் பிரதமர் பதவியில் இருந்து இம்ரான் கான்,



நீக்கப்பட்டதன் பின்னர் பல வழக்குகள் மற்றும் சட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

இந்த நிலையில், நேற்று அவருக்கு வழங்கப்பட்ட பிணை விடுதலை மூலம், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் அவர் போட்டியிட முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும், போட்டியிடுவதற்கான அனுமதி கிடைக்கும் பட்சத்தில், அதிக அளவில் மக்கள் ஆதரவினை அவர் பெறுவார் என அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் அவருக்கு பாகிஸ்தான் மக்கள் பெரும் ஆதரவினை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் நிலநடுக்கம்: வீதிகளில் தஞ்சம் அடைந்த பொதுமக்கள்

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் – ராவல்பிண்டி ஆகிய நகரங்களில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கம் காரணமாக நேற்று அதிகாலையில் இஸ்லாமாபாத் மற்றும் ஏனைய பகுதிகளை உலுக்கியதாக வெளிநாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.4 ஆக பதிவாகியுள்ளது.

ராவல் பிண்டியை மையமாக கொண்டு 16 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்துள்ளது.

இதனால், அச்சமடைந்த பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து வீதிகளில் தஞ்சம் அடைந்தனர் என அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.



# ஹெரொயின் போதைப் பொருளுடன் வவுனியாவில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பெண்கள் கைது!



(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையில் 16 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

பதில் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைய நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து விசேட போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

அதற்கு அமைய வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக உள்ள வியாபார நிலையம் ஒன்றில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டமையுடன், அந்தச் வியாபார நிலையத்தின் உரிமையாளரது தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீட்டிலும் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 16 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து அதனை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் வியாபார நிலையத்தின் உரிமையாளரான பெண் மற்றும் அவரது மகள்கள் என மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவின் தகவலுக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையினை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ரூ.12 கோடி பெறுமதியான தங்கத்துடன் இந்திய பெண் கட்டுநாயக்கவில் கைது!



12 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை நாட்டுக்கு கொண்டுவந்த இந்திய பெண்ணொருவர் கட்டுநாயக்க சுங்க பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

5.5 கிலோகிராம் நிறையுடைய தங்கம் இதன்போது கைப்பற்றப்பட்டதாக சுங்கப் பேச்சாளர் சீவலி அருங்கொட தெரிவித்துள்ளார்.

துபாயில் இருந்து அந்த பெண் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடுப்பு பட்டி மற்றும் கைப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தங்கம் மீட்கப்பட்டுள்ளது.

35 வயதான பெண் கண்டியில் வசிக்கும் நபரை திருமணம் செய்துள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இடம் மாற்றம் பெற்றுச் செல்லுகின்ற மட்டு நீதிவானின் சேவைக்கு பாராட்டு

**(கே.எ.ஹமீட்)**

இடம் மாற்றம் பெற்றுச் செல்கின்ற மட்டக்களப்பு நீதிவான் ஏ. பீற்றர் போலின் சேவையைப் பாராட்டி, அவருடைய பதவிக் காலத்தின் போது பணியாற்றிய மட்டக்களப்பு மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வு கடந்த செவ்வாயன்று நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது நீதிவானை மட்டக்களப்பு மாவட்ட மரண விசாரணை அதிகாரிகளின் இணைப்பாளர் எம். எஸ்.எம். நஸீர், மாவட்ட மரண விசாரணை அதிகாரிகள் சார்பாக பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.

பிரியாவிடை நிகழ்வில் நீதிவான் நீதிமன்ற பதிவாளர் திருமதி ரி.பிரிய தர்ஷினி, மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகளான எம்.எஸ்.எம். நஸீர், வி. ரமேஷ் ஆனந்தன், எஸ்.ராசகுமார், ரி.தவகுமார், எஸ். ஜீவரெத்தினம், வி. மணிமாறன், வி.ஆர்.மகேந்திரன், ஏ.எல். புஹாரிதீன், எம்.எம். அகமட் சின்னலெப்பை மற்றும் கே. பவளகேசன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

அங்கு உரையாற்றிய நீதிபதி பீட்டர் போல் "நான் கடமையாற்றிய கால கட்டத்தில் எனது கடமைப்பிரிவில் மரண விசாரணை அதிகாரிகளாக கடமையாற்றிய அனைவரும் சிறப்பாகவே தங்கள் பணிகளை மேற்கொண்டிருந்தீர்கள், அவ்வாறே தொடர்ந்தும் உங்கள் பணி அமையவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.



# அமைச்சுகள் சிலவற்றுக்கான புதிய செயலாளர்கள் நியமனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சில அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் செயலாளராக செயற்பட்ட எம். என். ரணசிங்க, நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளராக பெயரிடப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளர் பொறுப்பு வசந்தா பெரேராவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

வனவிலங்கு மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக குணதாச சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராக ஏ.சீ. மொஹமட் நஃபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளராக பிரதீப் யசரத்னவும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளராக சமன் தர்ஷன பண்டிகோரளவும் பெயரிடப்பட்டுள்ளனர்.

சுற்றாடல் அமைச்சின் செயலாளராக பீ.கே.பீ. சந்ரகீர்த்தியும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளராக கலாநிதி சுலக்ஷன ஜயவர்தனவும், போக்குவரத்துமற்றும்நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலலாளராக பொறியியலாளர் ரஞ்சித் ரூபசிங்கவும், தொழிநுட்ப அமைச்சின் செயலாளராக கலாநிதி தர்மஸ்ரீ குமாரதுங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதியினால் சில மாகாண சபைகளுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமத்திய மாகாண பிரதம செயலாளராக ஆர்.எம்.டபிள்யூ. எஸ். சமரதிவாகரவும், மேல் மாகாண பிரதம செயலாளராக எஸ்.எல்.டீ.கே விஜேசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.




**உரலார் கேள்வி :- நீங்கள் யாரையாவது பார்த்துப் பொறாமைப்பட்டிருக்கிறீர்களா?**

**உலக்கையார் பதில் :-** நான் எவரையும் பார்த்து இதுவரை பொறாமைப்பட்டதில்லை என்று சொல்ல விருப்பம்தான். ஆனால் பொய் சொல்ல மனம் ஒருப்படவில்லை. முற்றும் துறந்த முனிவர்கள் கூடத் தாம் பொறாமைப்பட்டதாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

இராமனை, ஜனகனுக்கு அறிமுகம் செய்கையில், விசுவாமித்திர முனிவர் 'இவனுக்கு நான்தான் அஸ்திரங்களைச் சொல்லிக் கொடுத்தேன். ஆனால், இவன் பிரயோகிக்கையில் அந்த அஸ்திரங்கள் இயங்கும் விதத்தைப் பார்த்து, எனக்கே பொறாமையாய் இருக்கிறது' என்று சொன்னதாகக் கம்பனில் வருகிறது (ஈந்தேனும் மனம் உட்க இவற்க்கு ஏவல் செய்குனவால்). இந்தப் பொறாமையைத்தான் தமிழில் 'மாச்சரியம்' என்கிறார்கள்.

இனி விடயத்திற்கு வருகிறேன். பொறாமைப் படாமல் சாதாரண மனிதனான என்னால் இருக்கமுடியவில்லை என்பதை வெட்கத்துடன் பகிரங்கமாய் ஒத்துக் கொள்கிறேன். என்னைவிட ஆற்றலாளர்களைக் காணும்போதும், என்னைவிட ஒழுக்கசீலர்களைக் காணும் போதும், என்னைவிட வலிமையான இலட்சியக்காரர்களைக் காணும் போதும் பொறாமை வரப் பார்ப்பதை நான் மறைக்க விரும்பவில்லை.

இதில் இன்னொன்றையும் சொல்லவேண்டும். நமக்கு நட்பானவர்கள் நம்மைவிட உயரும் போது பெரும்பாலும் நம் மனதில் பொறாமை வருவதில்லை. நமக்குப் பகையானவர்கள் நம்மை விட உயரும்போதுதான் நம்மையறியாமல் நம் மனதுக்குள் பொறாமை குடிகொள்ளப் பார்க்கிறது. இதிலிருந்து முடிந்தவரை எல்லோரிடமும் நட்புப் பேண முயல்வது நல்லது எனும் உண்மையைத் தெரிந்து கொண்டேன்.

ஆனாலும் அதுவும் நடைமுறைக்குச் சாத்தியமான ஒன்றாய்த் தெரியவில்லை. அதனால் பொறாமையை வெல்வதற்கு மனதுடன் நிறையப் போராட வேண்டியிருக்கிறது. 'அவரது தகுதி அவருக்கு. எனது தகுதி எனக்கு' என்று தத்துவார்த்தமாகச் சிந்தித்தால் அன்றி, அப் போராட்டத்தில் வெல்லமுடியாது எனும் உண்மை இப்போது தெரியவந்திருக்கிறது. அதுவும் இலேசான காரியமாய்ப்படவில்லை. உண்மையைச் சொல்லப் போனால் அன்றாடம் பொறாமையை வெல்ல முயன்று கொண்டிருக்கிறேன்...அவ்வளவே!

**சல்லடையார் சலிப்பு - 'வாரிதியாரிடம் இப் பதிலை நான் எதிர்பார்க்கவில்லைங்கோ. ஹீ..ஹீ'**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- இந்த வாரத்தில் நிகழ்ந்த சந்திப்புக்களில் உங்களை ஆச்சரியப்படுத்திய சந்திப்பு ஏதேனும் உண்டா?**

**உலக்கையார் பதில் :-** இல்லாமல் என்ன? அவரவர்க்கென்று தனித்த ஆற்றல்களை இறைவன் எல்லோருக்கும் படைத்திருக்கிறான். எங்களிடம் இல்லாத ஒன்றை மற்றவர்கள் இலகுவாய்க் கையாளும்போது ஆச்சரியம் வரத்தான் செய்கிறது. அப்படி என்னை ஆச்சரியப்படுத்திய ஒரு சந்திப்பு இந்த வாரத்தில் நிகழ்ந்தது.



சென்றவாரம் எங்கள் கழகத்திற்கு கிழக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்கள் வந்திருந்தார். கிட்டத் தட்ட ஒரு மணி நேரமளவில் அவரோடு பேசிக் கொண்டிருந்தேன். மனிதர் என்னைப் பிரமிப்பில் ஆழ்த்திவிட்டுச் சென்றார்.

என்னைவிட வயதில் எவ்வளவோ குறைந்தவரான அந்த இளைஞரிடம், ஓர் தலைவனுக்குரிய தகுதிகளைக் கண்டு வியப்படைந்தேன். உள்ளே வந்து உட்கார்ந்த மறுகணமே தன்னுடன் வந்த புகைப்படப் பிடிப்பாளரையும், மற்றவர்களையும்

**(15ஆம் பக்கம் பார்க்க)**

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே அனுப்பி வைத்தார். அந்தச் செயலே என்னை ஆச்சரியப்படுத்தியது. தன் ஆதர வாளர்கள் ஆனாலும், தனிமை பேணப்பட வேண் டிய இடத்தில் அதைப் பேணத் தெரிந்த அவரது நாகரீகம் என்னை ஈர்த்தது. அச் செயல் அவர்மேல் மதிப்பை உண்டாக்கிற்று.

பின்னர் அவருடன் பேசப்பேச அம் மதிப்பு உயர்ந்து கொண்டே சென்றது. தோற்றத்தில், அமைந்திருந்த கம்பீரம், பெரியவர்களுக்கு அவர் கொடுக்கும் மரியாதை, மூன்று மொழி களின் பிரயோகத்தில் அவர் பெற்று வைத்திருக்கும் ஆற்றல், அரசியல் நகர்வுகளில் அவர் காட்டும் தீர்க்கதரிசனம், தன் நிர்வாகத்தில் எவர்க்கும் வளைந்து கொடுக்காத உறுதிப்பாடு, தம் இனத் தாரின் உயர்வுக்காகப் பெற்றிருக்கும் பதவியைப் பயன்படுத்தத் தெரிந்த மதிநுட்பம், சில சிறிய விட்டுக் கொடுப்புக்களால் பெரிய பயன் அடையத் தெரிந்திருந்திருக்கும் கெட்டித்தனம், உலக அரசி யலிலும் ஊடாடத் தெரிந்த வீரியம், விமர்சிக்கும் துணிவுள்ள அயல் நாட்டுடனான உறுதியான நட்பு என அவருடனான அந்தக் கொஞ்சநேரச் சந்திப்பில், அவரின் பல ஆற்றல்களை இனங் கண்டேன்.

காலமும், கடவுளும் கை கொடுத்தால் நிச்சயம் இலங்கைத் தமிழர்களின் அரசியலில் அவர் ஓர் உயர்ந்த இடத்திற்கு வரப் போகிறார் என்று ஊகிக்க முடிகிறது.

அவருடான அந்தச் சந்திப்பு ஆச்சரியம் தந்த அதேவேளை, எங்கள் தலைவர்களை நினைத்து மனம் ஏங்கவும் செய்தது.

**சல்லடையார் சலிப்பு - 'மலையகத் தலைமை கள் மாண்புற்றுத் தொடர்கின்றன. வடக்கி லும், கிழக்கிலும் தான் தலைமைகளுக்கு முடக்குவாதம்போல.'**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- என்ன, உங்களுடைய ஆலோசனைகள் ஒன்றும் எடுபடவில்லைப் போல இருக்கிறதே? தமிழரசுக் கட்சியின் தலைமைக்கான போட்டியாளர்கள் மூவரும், தமது போட்டியிடும் முடிவில் உறுதியாக நிற் கிறார்கள் எனவும் போட்டியில் இருந்து வாபஸ் பெறும் எண்ணம் இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்களே, அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** சென்ற முறை இப் போட்டிபற்றி நான் எழுதியபோது, போட்டியிடு வோரை நோக்கி இப் பதவியை விரும்புவது எதற் காக? இப் பதவியை வைத்துச் செய்யநினைக்கும் விடயம் என்ன? இப் பதவிக்கான தமது தகுதிப்பாடு என்ன? என்ற மூன்று கேள்விகளை முன்வைத் திருந்தேன். இக் கேள்விகளுக்கான பதில்களை இதுவரை யாரும் தந்ததாய்த் தெரியவில்லை.

மக்கள் மன்றிற்குப் பதில் உரைக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி அண்மைக்காலத் தமிழரசுக் கட்சித் தலைவர்களிற்கு இருப்பதாய்த் தெரியவில்லை. நாடாளுமன்றத்திற்குப் போட்டி யிடுவோரைத் தேர்ந்தெடுத்தபோது, இன்னாரை இன்ன விடயத்திற்காகத் தேர்ந்தெடுக்கிறோம் என்று, எந்தவித நியாயமும் சொல்லாமல்தான், அவ் வாய்ப்புக்களை, குடும்பச் சொத்துப்போல் சம்பந்தன் தன் இஷ்டத்திற்கு அள்ளிக் கொடுத்தார்.

சாவகச்சேரித் தொகுதியில் போட்டியிட்டு அதிக வாக்குகளைப் பெற்ற அருந்தவபாலன் அவர்க ளுக்கு, பதவிக் காலத்தைப் பிரித்து வழங்குவோம் என்று, மக்கள் முன் வாக்களித்துவிட்டு, பின்னர் அதுபற்றி எந்தவித கவலையும் இல்லாமல் இருந்தது, மக்கள் மன்றை மதிக்காத இவர்களது செயலுக்கான மற்றொரு உதாரணம்.

இப்படி எத்தனையோ சொல்லலாம். போராட்டம், போராளிகள், புலிகள், தமிழீழம், சுயநிர்ணய உரிமை எனச் சில வார்த்தைகளை வைத்து 'வாய்ச்சவடால்' விட்டாலே போதும், அதைவைத்தே தமிழ் மக்களை ஏமாற்றி விடலாம் என்று இவர்கள் நினைக்கிறார்கள் போல. அதனால் தான் மக்களை மதிக்காத இவர்களது போக்கு தொடர்ந்து கொண் டிருக்கிறது.

இவர்களை மட்டும் குற்றம் சொல்லிப் பிரயோ சனம் இல்லை. ஏமாளிகளான நம் மக்கள் இவர்கள் வீசும் பொய் வலைகளில் தொடர்ந்து அகப்பட்டுக் கொண்டிருக்கும் வரை இவர்கள் இப்படியேதான் இருக்கப் போகிறார்கள். .

பொய்யை எவராலும் அதிக நாள்களுக்கு



நிலைக்கவைக்க முடியாது என்பது மட்டும் உறுதி. ஒன்றைமட்டும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இவர்கள் வெகுவிரைவில் தம் செயற்பாடுகளை மீள் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். ஏற்கனவே கழுதைதேய்ந்து கன்றுக்குட்டியாய் மாறி நிற்கிறது. அது கட்டெறும்பாய் ஆவதற்கு முன்பாக இவர்கள் விழித்துக் கொண்டால் நல்லது. இல்லாமல் இப்படியே மக்கள் மன்றை மதிக்கா மலும், பதவிப் போட்டிகளையே தமது நோக்கமாய் கொண்டும், ஆளுக்காள் காலை வாருவதே வேலை யாகவும், இந்தக் கட்சிக்கு ஒரு தலைவரும் இருக்கி றாரா? என்று நினைக்கும் வண்ணமுமாக தம் இஷ்டப்படி'தலைதெறிக்க' நடந்துகொண்டும் இருப்பார்களேயானால், வெகுவிரைவில் தந்தை செல்வா அவர்களின் சமாதிக்கருகில் இவர்களது கட்சிக்கும் மற்றொரு சமாதி கட்டவேண்டியிருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

**சல்லடையார் சலிப்பு - 'வாரிதியாருக்கு ஒண் டும் விளங்கேல்லைப் பாருங்கோ! தமிழினத் தைக் காப்பாத்தவல்லோ அவையள் மூண்டு பேரும் விட்டுக்குடுக்காமல் போட்டியிடு கினம். புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தும் தனித் தமிழீழத்தைக் கட்டாயம் பெற்றுத் தந்து விடுவார் பாருங்கோ! கேக்கிறவன் 'கேனையன்' என்றால் கேழ்வரகிலை நெய் வடியுது என்பாங்கள்.'**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖




# இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த கூட்டமைப்புக் கோருவதை ஈ.பி.டி.பி. வரவேற்கிறதாம்

## அதன் பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் தெரிவிப்பு

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி நீண்ட காலமாக வலியுறுத்தி வந்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்திருப்பதைத் தாங்கள் வரவேற்கின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மற்றும் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று வியாழனன்று இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில் நல்லிணக்கம், காணி, மீள் குடியமர்தல், தமிழக அகதிமுகாமில் இருக்கும் இலங்கையர்களின் பிரச்சினைகள், அரசியல் தீர்வு விடயங்கள், வடக்கு - கிழக்கின் அபிவிருத்தி தொடர்பில் ஆராயப்பட்ட போது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் தமிழ் தேசிய கூட்டடைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்திருந்தார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சுமார் 70 ஆண்டுகள் பழமை வாய்ந்த மிதவாத கட்சிகள் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கம்தான் தீர்வை முன்வைக்க வேண்டும் என வலியுறுத்தி வந்திருந்தனர். ஆயினும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆரம்ப படியாக கொண்டு எமது மக்களுக்கான அரசியல் தீர்வை நோக்கி நகர்வதற்கு அதனை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்திவந்தது.

“ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்“ என்ற போதும், யுத்தம் வலுவான உச்ச நிலையில் இருந்த போதும் நாம் இதனையே விடாப்பிடியாக வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

ஐ.நா மனித உரிமை பேரவையும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே கூறியிருக்கின்றது. அரசியல் யாப்பில் உள்வாங்கப்பட்ட விடயமாக இருப்பதனால் இதனை நடைமுறைப்படுத்துவதில் தடையேதும் இருக்கப்போவதில்லை.

ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் ஏனைய மிதவாத அரசியல் குழுக்களும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரதிபலிப்பான 13 ஆவது திருத்தத்த்சி தும்புக்கட்டையால் கூட தொட்டுப்பார்க்க முடியாது என வீர முழக்கமிட்டனர்.

ஆனால் எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா மிக நீண்ட அரசியல் பார்வையுடனும் தீர்க்கதரிசனமாகவும் துல்லியமான முறையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் 13 ஆவது திருத்தத்தைச் செயல்படுத்தி அதிலிருந்து மேலும் நாம் அதிகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் மிக தெளிவாக இருந்தார். அதனையே நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்றத்திலும் வெளிநாடுகளின் தூதுவர்களிடமும் வலியுறுத்தியும் வந்திருந்தார்.

70 ஆண்டுகளுக்கு மேலான பழமைவாத மிதவாத கட்சிகளும் பெரும் சட்டத்தரணிகளை கொண்டு அரசியல் நுட்பங்களை அறிந்த தத்துவ வித்தகர்களும் உள்ளதாக கூறப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் இதுவரை காலமும் எந்தவிதான அரசியல் தீர்வையோ அல்லது அரசியல் பொதியையோ முன்வைத்திருக்கவில்லை.

தன்னாட்சி, சுயநிர்ணயம், தேசியம் என பேசிக்கொண்டிருந்தார்களே தவிர தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை தேடிக் கண்டுபிடிக்கவில்லை. அதற்கான திட்டமும் அவர்களிடம் இருந்திருக்கவில்லை. தேர்தல் அரசியலை மட்டுமே இலக்காகக் கொண்டு நாளொரு பொய்யும் பொழுதொரு புழுகுமாக வீறாப்பாகவும் ஆக்ரோசமாகவும் அறிக்கைவிட்டுக்கொண்டிருந்தனர்.

ஆனால் தற்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 30 ஆண்டுகளுக்கு மேலாக வலியுறுத்திவந்த வழிமுறையை பின்பற்றிய கூட்டமைப்பு நேரடியாக ஜனாதிபதியிடம் தமது நிலைப்பாட்டை முற்படுத்தியுள்ளனர்.

கடந்தகாலங்களில் கடைத்த பல வாய்ப்புகளை தவறவிட்டது போன்றல்லாது இந்த வாய்ப்பையாவது பயன்படுத்தி வெளிப்படைத் தன்மையுடனும் இதயசுத்தியுடனும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பங்காற்றுமாயின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிய அதனை முழுமையாக வரவேற்கும். - என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# மின்கட்டணக் குறைப்புத் தொடர்பான யோசனை விரைவில் முன்வைக்கப்படும்

## மின்சார சபை அறிவிப்பு

மின்கட்டணத்தை குறைப்பது தொடர்பான யோசனையை எதிர் வரும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்குவதாக மின்சார சபை கூறியுள்ளதென இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த யோசனை கிடைக்கப்பெற்ற பின்னர் அது தொடர்பில் மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்படும் என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதன் பின்னர் மின்கட்டணத்தை குறைப்பது தொடர்பான பரிந்துரை வழங்கப்படும் என சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரமளவில் மின்கட்டணத்தை குறைப்பது தொடர்பான யோசனைக்கு அனுமதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை மின்சார சபையின் செயற்பாடுகளை சுயாதீன நிறுவனத்தினூடாக கணக்காய்வு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என

அதன் நிர்வாக சபையால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சுயாதீன கணக்காய்வு நடவடிக்கைகளை எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## போதைப் பொருள் குற்றங்களுக்கு எதிரான போர்

# 13 கோடி 40 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் பொலிஸாரால் முற்றுகை



போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக 13 கோடி 40 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் மற்றும் உடமைகள் என்பன நேற்று முற்றுகையிடப்பட்டுள்ளன.

சட்டவிரோத சொத்துகள் மற்றும் உடைமைகள் தொடர்பான விசாரணை பிரிவினரால் அவை முற்றுகையிடப்பட்டன எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் இருந்து இடம் பெறும் போதைப் பொருள் வர்த்தகத்தின் ஊடாக இந்தச் சொத்துகளும் உடைமைகளும் ஈட்டப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்படி, அடுக்குமாடி குடியிருப்பு, வாகனங்கள் மற்றும் 45 அடி நீளமான பல நாள் படகு ஒன்று என்பன இவ்வாறு முற்றுகையிடப்பட்டன தெரிவிக்கப்படுகிறது.



# இருக்கும் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் அவசியம்

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கி.வசந்தரூபன்)

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் தேவை என முன்னாள் தேர்தல் ஆணையாளரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் மற்றும் "பீபிள்ஸ் பவுண்டேசன்" ஆகிய இரு நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்த "எமது உரிமைகள், எமது வளங்களை பாதுகாக்க எமது மாகாணத்தின் மாகாண சபையை வலுப்படுத்துவோம்" என்ற தொனிப்பொருளிலான செயலமர்வொன்று கண்டி வரையறுக்கப்பட்ட கூட்டுறவு அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஜனநாயக நாடு என்ற அடிப்படையில் மாகாணசபை அவசியம். மாகாண சபை இந்நாட்டுக்கு அவசியமில்லை என யாராவது குறிப்பிடுவார்களாயின் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை தேவையும் இல்லை.

தற்போது மாகாண சபை மக்கள் கூட்டிணைப்பற்ற அரச அதிகாரிகளால் செயற்படுத்தப்படுகின்றது. இதனால் மாகாண சபை குறித்தான கேள்வியொன்றை எழுப்பும் போது அரச அதிகாரிகள் அதற்கு நேரடியாக பொறுப்பேற்காமல் இருக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் இந்நிலை மாற்றமடைந்திருக்கும்.

தற்போது மாகாண சபை செயல்திட்டங்களில் மக்கள் கருத்துக்களைக் கேட்டறிய வாய்ப்பு இல்லை. எனவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை தெரிவு செய்தலை உடன் மேற்கொள்ள வேண்டும். அனேகமானோர் மாகாண சபை வெள்ளை யானை என தெரிவித்து வருகின்றமையுடன், மாகாணசபை உறுப்பினர்களைப் பராமரிக்க அதிக நிதி வீண்டிக்கப்படுவதாக கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். அவர்களின் பராமரிப்புக்கு அரச வருமானத்தில் ஒரு வீதமளவே செலவாகுகின்றது.–எனவும் தெரிவித்தார்.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ஜயலத் பண்டார, ராஜா உஸ்வெட கெய்யாவ, ஜனநாயக இளைஞர் காங்கிரஸின் தலைவர் கே.அர்ஜுன, 'பீபிள்ஸ் பவுண்டேசன்' நிறுவனத்தின் தலைவர் எரிக் ஹேரத், கண்டி மாவட்டத்தின் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் இளைஞர், யுவதிகள் எனப் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# சூதாட்டத்தில் ஈடுபட்ட 6 மாணவர்கள் கைது!

இரத்தினபுரி பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கட்டடமொன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்டஆறு பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆறு பேரும் பாடசாலைக்கு செல்லும் வழியில், சீருடைகளுக்கு பதிலாக வேறு ஆடைகளை அணிந்துகொண்டு சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஆறு பேரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை!





விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தி, அதனூடான பலன்களைப் பெறுவதற்கு தேவையான வழி காட்டுதல்களை வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை துறைசார் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணப் பிரதானிகள், மாவட்டப் பிரதானிகள் மற்றும் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலாளர் பிரிவுகளின் தலைவர்கள் இது தொடர்பான கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இந்த வேலைத்திட்டத்திற்கு தனியார் துறையினரின் பங்களிப்பைப் பெறுவதற்குத் தேவையான சட்டவரைவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன எனவும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.













## பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள



# இலங்கைக்கு பூரண ஆதரவு

## டில்லி உறுதி

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலான இலங்கைத் தூதுக் குழுவினர், இந்திய மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை சந்தித்தனர்.

கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் தொடர்புகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே காணப்படும் நெருங்கிய உறவுகளை தொடர்ந்தும் வலுவான முறையில் கொண்டு செல்ல வேண்டியதன் அவசியத்தை இந்திய சபாநாயகர் வலியுறுத்தினார்.

அத்துடன், தற்போதைய பொருளாதார நிலைமையின் போது இலங்கைக்குத் தொடர்ந்தும் பலமாக இருப்போம் என்றும் இந்திய மக்களவை சபாநாயகர் உறுதியளித்தார்.

இலங்கை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையிலான சந்திப்பும் நடைபெற்றது.

இலங்கைக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ள பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள சகல விதமான ஒத்துழைப்புக்களையும் வழங்குவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

இலங்கைக்கு சுற்றுலாவை மேற்கொள்ளும் இந்திய சுற்றுலாப் பயணிகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்தியாவுக்கு விஜயம் செய்யும் இலங்கை சுற்றுலாப் பயணிகளுக்கான வீசா வசதிகளைத் துரிதப்படுத்துவது தொடர்பிலும், இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச வீசா வழங்குவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. இந்த நாட்டில் வெங்காய விலை பாரியளவில் அதிகரித்துள்ளமைக்கான தீர்வொன்றை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இந்திய முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும் என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அழைப்பு விடுத்தார். இலங்கையில் முதலீடு செய்வதற்கு இந்திய முதலீட்டாளர்கள் பலர் ஆவலுடன் இருப்பதாகவும், அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இங்கு குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட நெருக்கடியான சூழலில் இந்நாட்டின் ஜனநாயகம் அச்சுறுத்தலுக்கு உள்ளான போது, இலங்கையின் ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்த இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு சபாநாயகர் நன்றி தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடங்களில் வழங்கப்பட்ட 550 மில்லியன் இந்திய ரூபா கடன் தொகையை செலுத்துவதற்கு மேலும் இரண்டு வருடங்கள் அவகாசம் வழங்கியமைக்காகவும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நன்றி தெரிவித்தார். அது மாத்திரமன்றி, ஏனைய நாடுகளை விட இலங்கையின் உண்மையான நட்பு நாடு என்ற ரீதியில் இந்திய வழங்கிய சகலவிதமான ஒத்துழைப்புக்களுக்கும் சபாநாயகர் தனது பாராட்டையும், நன்றியையும் வெளிப்படுத்தினார்.

சபாநாயகர் தலைமையிலான குழுவினர் மாநிலங்களவைத் தலைவர் மற்றும் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் வ ஜகதீப் தங்கர் அவர்களையும் சந்தித்தனர். இந்தச் சந்திப்புக் குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய மாநிலங்களவைத் தலைவர், இலங்கையிலிருந்து இது போன்றதொரு தூதுக்குழு ஐந்து வருடங்களின் பின்னர் இணைந்திருப்பதாகத் தெரிவித்தார். இரு நாட்டு மக்களுக்கும் இடையே உள்ள ஆழமான உறவை மேலும் பாதுகாத்துப் பேணுவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. இரு நாட்டின் மீன்பிடித் துறையினர் கடல் எல்லையைத் தாண்டுவது உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் விடயமல்ல, மீனவர்களைக் கைதுசெய்யும்போது இரு நாடுகளும் நெகிழ்வான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்றும் மாநிலங்களவைத் தலைவரினால் சுட்டிக்காட்டப்பட்டது.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச, குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, நாடாளுமன்ற உறுப்பினர்களான நிரோஷன் பெரேரா, மொஹமட் முஸம்மில், வருண லியனகே, வீரசுமண வீரசிங்ஹ, எம்.ராமேஸ்வரன், ஜகத் சமரவிக்ரம, வ உதயகுமார், நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன மற்றும் இலங்கை நாடாளுமன்றத்தின் அதிகாரிகளும் இந்தக் குழுவில் இணைந்துகொண்டுள்ளனர்.

# கொவிட் காலத்திற்கான நிதி சேகரிப்பு இணையத்தளத்தை நிறுத்தத் தீர்மானம்

கொவிட் – 19 பரவல் காலத்தில் அறிவுறுத்தல்கள் வழங்குதல் மற்றும் நிதி சேகரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட Itukama.lk என்ற இணையத்தளத்தை நிறுத்துவதற்கு ஜனாதிபதி செயலகம் தீர்மானித்துள்ளது.

கொவிட் – 19 பரவலை கட்டுப்படுத்தியதன் பின்னர் இந்த இணையத்தளத்தின் செயற்பாடுகள் கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டன.

இது குறித்த அறிவித்தல் மற்றும் நிதி தொடர்பிலான விடயங்கள் மாத்திரமே பேஸ்புக் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், அதனையும் முழுமையாக இடைநிறுத்த ஜனாதிபதி செயலகம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது இந்த இணைய பக்கம் பயன்பாட்டில் இல்லை என்பதால் இணைய பக்கத்தின் பெயரை வேறு தரப்பினர் தவறான வழியில் பயன்படுத்துவதற்கான இயலுமை காணப்படுவதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

# நெல்லியடியில் வீடொன்றில் தேடுதலில் 4 வாள்கள் மீட்பு

யாழ்ப்பாணம் – நெல்லியடி பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 4 வாள்கள், சட்டவிரோத சிகரெட் பெட்டிகள் என்பவற்றுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

நெல்லியடி மாலுசந்தி பகுதியில் உள்ள வீடொன்றில் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே வீட்டில் இருந்து நான்கு வாள்களும் சட்டவிரோதமான சிகரெட் பெட்டிகளுகளும் மீட்கப்பட்டன.

அதனை அடுத்து அவற்றை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் 38 வயதான சந்தேக நபரொருவரும் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக நடவடிக்கைக்காக நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# மலேசியாவில் நடந்த குத்துச்சண்டையில் ஐந்து பதக்கங்களை வென்றது இலங்கை



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மலேசியாவில் இடம்பெற்ற 34ஆவது இளைஞர் குத்துச் சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை வீரர்கள் 5 பதக்கங்களை பெற்றுள்ளனர்.

இலங்கை அணி சார்பில் அதன் தலைவர் பசிது உமயங்க தங்கப் பதக்கத்தையும், கல்கிஸை புனித தோமஸ் கல்லூரி மாணவன் யசிது மற்றும் கண்டி சில்வஸ்டர் கல்லூரி மாணவன் ஹேஸான் ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும், கண்டி திருத்துவக் கல்லூரி மாணவர்களான வருண மற்றும் சல்மான் பாரிஸ் ஆகியோர் வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.12.2023




இன்று சவால்களை சந்திக்க அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும். இதனால் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் பணப்பற்றாக்குறை ஏற்படும்.

பதட்டம் காரணமாக கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று மிதமான வளர்ச்சி காணப்படும். பொறுமையும் உறுதியும் இருந்தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

நேரமின்மை காரணமாக பணியில் தாமதங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த இயலாத சூழ்நிலை காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விலக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் காணப்படாது. தேவையற்ற விஷயங்களுக்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.

மன உளைச்சல் காரணமாக தொடை மற்றும் கால் விரல்களில் வலி ஏற்படலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று மன அமைதியுடன் காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

பணிகள் சுமுகமாக நடக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இரவரும் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நிதிநிலையை நன்கு சமாளிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிபடுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.12.2023




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிச மான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான நாள். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படுவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

பணியிடத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுநிலை சுமாராக இருக்கும். உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவது மற்றும் திறமையான தொடர்பாடல் நல்லது.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். பணவரவிற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இல்லாமல் திடமான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




பல தடைகளுக்கு பிறகு வெற்றியைக் காண்பீர்கள். கவலைகளை நீக்கி மனதை அமைதியாக வைத் திருங்கள்.

இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்ற வேண்டும். பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மை உணர்வு கொள்வீர்கள். இது மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

அதிக மன உளைச்சல் காரணமாக கால்களில் வலி காணப்படும்.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park